**சென்னை–6 பள்ளிக் கல்வி இயக்கக பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் துணை இயக்குநரின் (மின் ஆளுகை) செயல்முறைகள்.**

**ஒ.மு.எண். 081538/எச்/இ3/2014, நாள்.31.10.2014.**

பொருள்– தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005– நிதி உதவிபெறும் பள்ளிகள் பொது சேல நலநிதி வட்டி கணக்கிடுதல் – தகவல் கோரல் சார்பு.

பார்வை– சம்மந்தப்பட்டவரின் விண்ணப்ப மனு நாள். 09.10.2014.

= =

பார்வையிற் கண்ட மனுவில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய விவரங்களுக்கு கீழ்க்கண்டவாறு தகவல்கள் அளிக்கப்படுகிறது.

| வ.எண். | மனுதாரர் கோரிய தகவல்கள் | வழங்கப்படும் தகவல்கள். |
|---|---|---|
| 1. | பொது வருங்கால வைப்பு நிதி– தமிழ்நாடு 1991 விதிகளின்படியும் 2006–ம் ஆண்டு 31 மே மாதம் வெளியிடப்பட்ட GPF விதிகள் 4,5 A–ன் திருத்தப்பட்ட விதிகளின்படியும் அனைத்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் சேமிப்பு நல நிதிக் கணக்கு விவரங்கள் தங்கள் துறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழ்நாடு அரசு கல்வித்துறையின் கீழ் செயல்படும் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் 31.03.2003 ஆண்டு வரை பணி நியமனம் செய்ப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் சுமார் 50,000 மேற்பட்டோர் பழைய நலவூதிய திட்டத்தின் கீழ் பணியாற்றி வருகிறார்கள். இவர்களும் அரசு ஊழியர்களுக்கு இணையாகவே கருதப்பட்டு அரசு கருவூலங்களின் மூலம் மாத தொகை (ASTPF) TamilNadu Government Aided School Teachers Provident Fund என்ற பெயரில் கணக்கு எண் வழங்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் தமிழக அரசு கருவூலங்களில் சேர்க்கப்படுகிறது. மேற்கண்ட கோடிக்கணக்கான ரூபாய் வரவு கணக்குகளை விதிப்படி தங்கள் துறை பராமரிக்கிறதா அல்லது கல்வித்துறையின் கீழ் இயங்கும் நிதித்துறை பராமரிக்கிறதா ?<br>அரசு நிதி உதவிபெறும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் தாங்கள் தரும் வருங்கால வைப்பு நிதித் தொகை தமிழகம் முழுவதும் சேர்த்தால் கோடிக்கணக்கான தொகையினை குறிக்கிறது. இப்பணம் எந்த கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அரசின் கீழ் எத்துறையின் எப்பிரிவு இப்பணத்தை கணக்கு வைத்து பராமரிக்கிறது என்பது தெளிவில்லாமல் உள்ளது. | அரசாணை எண். 1133, பள்ளிக்கல்வித்துறை நாள். 22.06.88–ல் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

WWW.KALVIKURAL.COM

| | | |
|---|---|---|
| 2. | தமிழ்நாடு அரசு – கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பழைய ஒய்வூதியத் திட்டத்தில் (31.03.2003 வரை பணிநியமனம் பெற்ற ஆசிரியர் மற்றும் அலுவலர்கள் ) பணியாற்றும் சுமார் 50,000/–க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வருங்கால வைப்பு நிதி கணக்குகளை (Aided School Teachers Provident Fund Accounts) ஏன் GPF Account ஆக இதுநாள் வரை விதிப்படி ஏன் மாற்றப்படவில்லை. | வினா எண் 1–க்கு அளிக்கப்பட்ட பதிலே பொருந்தும் |
| 3. | GPF- Tamilnadu rules 1991 GPF Tamilnadu 2006 – Corrected upto 31st may 2006) விதிகளின் படி (ASTPF) TamilNadu Government Aided School Teachers Provident Fund கணக்குகளை கோடிக்கணக்கான பணம் பரிவர்த்தனை கணக்குகள் தங்கள் துறையின் கீழ் கொண்டு வர ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? | கேள்வி சார்ந்த வினாக்களுக்கு தகவல் அளிக்க விதிகளின் இடமில்லை. |
| 4. | Tamin Nadu Government Education Dept, Aided School Teachers Provident Fund Account மூலம் தமிழகத்தில் கோடிக்கணக்கான ரூபாய் எக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. தங்கள் துறையின் கீழ் கொண்டு வர விதிகளில் இடம் உள்ளதா ? | மேற்கண்ட பதிலே பொருந்தும். |
| 5. | Teachers Provident Fund கணக்கின்படி கீழ்க்கண்ட ஆண்டுகளுக்கு வட்டி விகிதம் எவ்வளவு சதவீதம் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது ? இது –க்கு பொருந்துமா i) 2010-2011 ii) 2011-2012 iii) 2012-2013 iv) 2013-2014 v) 2014-2015 | அரசு ஊழியர்களுக்கு மாநிலக் கணக்காயரால் பொது சேமநலநிதி சந்தாவுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு வட்டி கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறதோ அதுவே ASTPF–க்குப் பொருந்தும். வினா எண் 1–க்கு அளிக்கப்பட்ட பதிலில் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

ஒப்பம்/31.10.14

பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் (மற்றும்)
(மின் ஆளுகை) பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை–6

பெறுதல்

திரு.நா.கமலக்கண்ணன், எண்.70/69, சிமிட்ரி ரோடு,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–600 021, தமிழ்நாடு

WWW.KALVIKURAL.COM